ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2207/16 - 2020 දෙසැම්බර් මස 26 වැනි සෙනසුරාදා - 2020.12.26

*2207/16 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**(175 ஆவது அத்தியாயமான) யாத்திரிகள் கட்டளைச் சட்டம்**

*சிவனொளிபாத மலை வாரம் - 2020/2021*

*அறிவித்தல் இல. 1*

மேற்குறிப்பிட்ட யாத்திரைக்காலம் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி வரை நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் யாத்திரைக் காலத்தில் செல்லுபடியாகும் என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

1948, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க, வர்த்தமானி
1949, யூலை மாதம் 22 ஆந் திகதிய 10000 ஆம் இலக்க, வர்த்தமானி
1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11,255 ஆம் இலக்க, வர்த்தமானி
1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12,508 ஆம் இலக்க, வர்த்தமானி
1962, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12,947 ஆம் இலக்க, வர்த்தமானி
2017, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2034/33 ஆம் இலக்க, வர்த்தமானி

**மாலினி லொகுபோதாகம,**
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்,
இரத்தினபுரி மாவட்டம்.

மாவட்ட செயலகம்,
இரத்தினபுரி.

1A - G 33370 — 30 (2020/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

சிவனொளிபாத மலை வாரம் - 2020/2021

அறிவித்தல் இல. 2

1948, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க வர்த்தமானி, 1949, யூலை மாதம் 22 ஆந் திகதிய 10000 ஆம் இலக்க வர்த்தமானி, 1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11,255 ஆம் இலக்க, வர்த்தமானி, 1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12,508 ஆம் இலக்க வர்த்தமானி, 1962, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12,947 ஆம் இலக்க வர்த்தமானி, 2017, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2034/33 ஆம் இலக்க வர்த்தமானி ஆகியவற்றின் முதல் யாத்திரைக் காலம் தொடர்பிலான ஒழுங்குவிதிகள் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது. இவ் ஒழுங்குவிதி தொடர்பாக கீழ் குறிப்பிட்ட விடயங்களை அறியத் தருகின்றேன்.

01. ஓய்வறை/அம்பலம் என்பது

1.1 லிஹிணிஹெல, பலாபத்தல விகாரை, ஹெரமிடிபான, ஆண்டி அம்பலதென்ன, வர்னாகல, சீதக்குலை, மெதஹின்ன, இந்திகடுபான என்ற அம்பலங்கள் தங்குமிடங்களாக உபயோகித்தல் வேண்டும்.

1.2 தற்காலிக தங்குமிடங்கள் தயார்செய்தல் அல்லது நடாத்திச் செல்லுதல் கூடாது.

02. கட்டிடங்கள் கட்டுதல்

நான் அல்லது அதிகாரம்மிக்க அலுவலரின் எழுத்துமூல அனுமதியின்றி எவரேனும் அல்லது 2020, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி முதல் 2021 மே மாதம் 27 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியினுள் நிரந்தர அல்லது தற்காலிக கட்டிடம், தங்குமிடங்கள், வியாபாரத் தலங்கள் நிறுவக்கூடாது.

03. யாசகர்கள்

சிவனொளிபாத ஸ்தலத்தில் அல்லது அம்பலத்தில்/ஓய்வறைப் பகுதியில் எந்தவோர் இடத்திலும் யாசகர்கள் யாசகம் கேட்பது அல்லது யாசகம் பெறுவது, யாசகம் வழங்குதல் அல்லது பகிர்ந்தளித்தல் கூடாது.

04. குளித்தல் மற்றும் கழுவுதல்

4.1 தற்போது வனப் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் மாகாண நிர்வாக ஸ்தாபனங்களூடாக அடையாளப்படுத்தப்பட்டு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பான இடங்களிலன்றி ஏனைய இடங்களில் குளித்தல் அல்லது துணிகளை கழுவுதல் கூடாது.

4.2 தனியார் நிறுவனங்கள் ஊடாக குளித்தல் அல்லது துணி கழுவுவதற்கான இடவசதிகளை வழங்குவதற்குரிய ஏற்பாட்டினை மேற்கொள்ள விரும்பின் அதற்காக வனப் பாதுகாப்புத் திணைக்களம், மாகாண சபை நிர்வாகத்தினால் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சட்டபூர்வமான எழுத்துமூல அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

05. வாகனம்/பிரயாணப் பாதை

5.1 பிரதேச சபை அல்லது உரிய மாகாண நிர்வாக சபைகளினால் ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் வாகனங்கள் நிறுத்துவதோ உட்பிரவேசிப்பதோ கூடாது.

5.2 யாத்திரைக் காலங்களில் ரஜமாவத்தை (பலாபத்தல வீதி), ஹட்டன் நல்லதண்ணி பாதை மற்றும் குருவிட்ட எரத்ன பாதைகள் ஒதுக்கப்பட்ட பிரதான பாதைகளாக காணப்படும்.

06. சுற்றாடல் மற்றும் உட்கட்டமைப்பு

6.1 யாத்திரையின்போது பாதையில் அல்லது சிவனொளிபாத மலை சுற்றுப்புறத்தில் அல்லது ஓய்வு சாலை அருகே சுற்றாடலை மாசுப்படுத்தும்விதமாக பொலித்தின், பிளாஸ்டிக் என்பவற்றை உரிய முறையின்றி வீசுதல் கூடாது.

6.2 சிவனொளிபாத மலை வனப்பிரதேசத்தினுள் தீப்பிடிக்கும் வகையிலான தீச்சுவாலைகள் ஏற்படுத்தல் அல்லது தீ வைத்தல் கூடாது.

6.3 யாத்திரைக் காலத்தில் பக்தர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் குப்பை கூளங்களை அகற்றும் நடவடிக்கையினை மாகாண நிர்வாக சபைகளுக்கு மற்றும் மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகருக்கு வழங்குகின்றேன்.

07. வைத்திய வசதிகள்

தனியார் நிறுவனங்கள் ஊடாக வைத்திய வசதிகள் வழங்குதல்/முதலுதவி மத்தியஸ்தானங்கள் நிறுவல் ஆகியவை தொடர்பில் மாவட்ட சுகாதார அத்தியட்சகர்களினால் மற்றும் மாகாண நிர்வாக சபையினால் முன்னறிவித்தலுடனான எழுத்துமூல அனுமதியினைப் பெறல் வேண்டும்.

08. வியாபாரம் மற்றும் நன்கொடை

8.1 தற்போது காணப்படும் கொவிட் - 19 நோய் தொற்று காரணமாக தங்குமிடங்களில் மற்றும் வழிநெடுகிலும் திரிந்து பொருள் விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

8.2 நான் அல்லது என்னால் அனுமதியளிக்கப்பட்ட அலுவலரினால் அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் பூஜைப் பொருட்கள், பூஜைக்கான வட்டிகள், உணவுப்பண்டங்கள் அல்லது ஏனைய பொருட்களை விற்பனை செய்யக்கூடாது.

8.3 மதுபானம், புகைப்பொருள் அல்லது போதைப்பொருட்களை பிரயாணத்தின்போது எடுத்துச்செல்லல் அல்லது வியாபாரத் தலங்களில் வைத்தல், விற்பனை செய்தல், கொள்வனவு செய்தல் அல்லது பாவனை செய்தல் கூடாது.

8.4 உட்பிரவேசிப்பு வீதி ஓரங்களில் அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர்ந்த ஏனைய எந்த இடத்திலும் தற்காலிக அல்லது நிரந்தர வியாபாரத் தலங்களை அமைத்தல் அல்லது நடாத்திச்செல்லல் அல்லது வியாபாரம் செய்தல் கூடாது.

8.5 சகல வியாபாரத் தலங்களிலும், கட்டடங்களிலும் குப்பைகூழங்களை அகற்றுவதற்கான பாத்திரங்களை வைத்திருப்பதுடன் குப்பைகளை அதனுள் இட வேண்டும்.

8.6 வியாபாரத்திற்காக தயாரித்து வைக்கப்பட்டுள்ள உணவுப்பண்டங்களில் ஈக்கள் படியாதவாறு பாதுகாப்பான முறையில் மூடிவைக்க வேண்டும்.

8.7 உணவு நன்கொடைகளை (தன்சல்) வழங்குவதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது. அத்தியாவசியமான எவரேனும் இருப்பின் முகக்கவசம் மற்றும் சுகாதார பொருட்களை வழங்குதல் (தன்சல்) யாத்திரை தொடங்கும் இடத்தில் நடாத்திச்செல்லலாம்.

8.8 அதற்காக என்னிடம் அல்லது அதிகாரம்மிக்க அலுவலரின் முன்னறிவித்தலுடனான எழுத்துமூல அனுமதியினைப் பெறல் வேண்டும்.

09. கொவிட் - 19 தொற்று நிலைமையினுள் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள்

9.1 சரியான சுகாதார வழிமுறைகளை பின்பற்றல், முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியினை கடைப்பிடித்தலை பின்பற்றி யாத்திரையில் ஈடுபடல்.

9.2 (i) யாத்திரையினை மேற்கொள்ளவுள்ள நபர்கள் தமது யாத்திரை குழு தொடர்பான விபரங்களை உரிய பிரதேச செயலக அலுவலகங்களில் பதிவுசெய்தல் வேண்டும்.

(ii) தனிமைப்படுத்தப்படவில்லை என்பதற்கான அத்தாட்சியுடன் அப்பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ்களின் இரண்டு பிரதிகள் கொண்டுவரப்பட வேண்டும்.

(iii) ஒரு பிரதியினை யாத்திரையின் தொடக்கத்தில் பரிசோதனைசெய்யும் (நல்லதண்ணி, வர்ணகல, பலாபந்தல பாதையில்) பரிசோதனை செய்யும் அலுவலர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

(iv) வார இறுதி நாட்களில் வருகை தருவதை மட்டுப்படுத்திக்கொள்ளல்.

(v) முதியவர்களை யாத்திரைக்கு அழைத்து வருவதை மட்டுப்படுத்திக்கொள்ளல்

9.3 சிவனொளிபாத யாத்திரையில் ஈடுபடுவோர் மலை உச்சி கோயிலில் தங்காது வணங்கிச் செல்லல் வேண்டும்.

**மாலினி லொகுபோதாகம,**
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
இரத்தினபுரி மாவட்டம்.

மாவட்டச் செயலகம்,
இரத்தினபுரி,
2020, திசெம்பர் 22.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.